காலைக்கதிர் (23.02.2025)




■ புகழூர் டி.என்.பி.எல்., சார்பில், நடமாடும் இலவச மருத்துவ முகாம் வாகனத்தை, மேலாண்மை இயக்குனர் சந்தீப்சக்சேனா தொடங்கி வைத்தார். அருகில், ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன். முதன்மை மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன்.

# டி.என்.பி.எல்., ஆலை சார்பில் நடமாடும் இலவச மருத்துவம்

**கரூர், பிப். 23–**

புகழூர், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன வளாகத்தில், சமுதாய நலப்பணி திட்டத்தின் கீழ், நடமாடும் இலவச மருத்துவ முகாம் தொடக்க விழா நடந்தது.

நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் சந்தீப் சக்சேனா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.ஆலையை சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி டவுன் பஞ்., வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர், திருக்காடுதுறை ஆகிய பஞ்., பகுதிகளில் உள்ள, 70 கிராமங்களில் நடமாடும் இலவச மருத்துவ முகாம் நடக்கிறது. நிகழ்ச்சியில், காகித ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், மருத்துவ அலுவலர் ராஜா உள்பட பலர் பங்கேற்றனர்.

**தினமலர் (22.02.2025)**




புகளூர் காகிதஆலை மற்றும் கோவை ராயல் கேர் மருத்துவமனை சார்பில் நடைபெறும் தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாமை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன தலைவர் சந்தீப் சக்சேனா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# நடமாடும் இலவச மருத்துவ முகாம் தொடக்கம்

**வேலாயுதம்பாளையம், பிப். 22–**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தனது சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் பொது மருத்துவ முகாம், கண் சிகிச்சை முகாம் ஆகியவற்றை நடத்தி வருகிறது. அந்த வகையில் பொதுமக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்வதற்காக காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆகியவை இணைந்து காகித ஆலையைச் சுற்றியுள்ள ஊராட்சி பகுதிகளில் உள்ள 70 கிராமங்களில் நடமாடும் இலவச மருத்துவ முகாம்களை தினசரி நடத்த திட்டமிட்டுள்ளது.

அதன்படி காகித ஆலை வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் நடமாடும் இலவச மருத்துவ முகாமை தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் சந்தீப் சக்சேனா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

காகித ஆலை முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன், பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், மருத்துவ அலுவலர் ராஜா மற்றும் காகித ஆலையின் மற்ற துறைகளைச் சேர்ந்த பொது மேலாளர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

தினகரன் (22.02.2025)

### தமிழ்நாடு காகித நிறுவனம் சார்பில்

# இலவச நடமாடும் மருத்துவ முகாம் தொடக்கம்

## மேலாண்மை இயக்குநர் தொடங்கி வைத்தார்



வேலாயுதம்பாளையத்தில் உள்ள காகித ஆலையில் நடமாடும் இலவச மருத்துவ முகாம் வாகனத்தை மேலாண்மை இயக்குநர் சந்தீப் சக்ஷேனா தொடங்கி வைத்தார்.

வேலாயுதம்பாளையம், பிப்,22: வேலாயுதம்பாளையம் தமிழ்நாடு காகித நிறுவனம் சார்பாக நடமாடும் இலவச மருத்து முகாம் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொது மக்களின் உடல்நலனை பேணுவதற்காக ஆண்டு தோறும் பொது மருத்துவ முகாம், கண் சிகிச்சை முகாம் மற்றும் மாதந்தோறும் இலவச மருத்துவ முகாம் ஆகியவை நடைபெற்று வருகிறது. மேலும் அரசு மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மருத்துவ உபகரணங்களையும் வழங்கி வருகிறது. பொது மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்வதற்க்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், ராயல் கேர் மற்றும் கோவை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையுடன் இணைந்து காகித ஆலையை சுற்றியுள்ள புகளூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகளூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள சுமார் 70 கிராமங்களில் தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம்களை நடத்த திட்டமிட்டுள்ளது. மேற்கண்ட தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாமை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், முனைவர். சந்தீப் சக்சேனா, நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த மருத்துவ வாகனத்தில் எக்ஸ்ரே வசதி, ஸ்கேன் வ்சதி, ஈஜிசி வசதி, கண் பரிசோதனை, க்காது கேட்கும் திறன் உள்பட பல்வேறு நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் காகித ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) எஸ். நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன், மருத்துவ அலுவலர் ஏகேகே ராஜா, ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் சீனியர் பொது மேலாளர் வெங்கடேசன், துணை மேலாளர் பிரபாகரன் ஆகியோர் மற்றும் ஆலை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**தினத்தந்தி (22.02.2025)**




# புகழூர் காகித ஆலை சார்பில் நடமாடும் மருத்துவ முகாம்

## மேலாண்மை இயக்குனர் தொடங்கி வைத்தார்

நொய்யல், பிப்.22-

புகழூர் காகித ஆலை மற்றும் கோயம்புத்தூர் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இணைந்து காகித ஆலையை சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நன்செய்ப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள சுமார் 70 கிராமங்களில் தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம்களை நடத்த திட்டமிட்டுள்ளது. அதன்படி காகித ஆலை வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாமை அதற்கான வாகனத்தை இயக்கி வைத்து காகித ஆலையின் தலைவரும், மேலாண்மை இயக்குனருமான சந்தீப் சக்சேனா கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இதில் காகித ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், மருத்துவ அலுவலர் ராஜா, ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் சீனியர் பொது மேலாளர் வெங்கடேசன், துணை மேலாளர் பிரபாகரன், பொது மேலாளர்கள், அதிகாரிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.